செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 265 நாள்: 9/5/17

# செய்திக்குறிப்பு

**வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் . திரு . சி . அ . ராமன்,இ . ஆ . ப . அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:**

வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக 13.05.2017 அன்று (சனிக்கிழமை) முதல் தொடங்கி தொடர்ந்து, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC- GROUP-IIA) தேர்வு வாரியத்திற்கு இலவச பயிற்சி வகுப்புகள் வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் மற்றும் அரக்கோணம் S.R கேட் அருகில் உள்ள நகராட்சி ஆரம்ப பள்ளியிலும் நடைபெற உள்ளது .

இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த பயிற்சி ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது . பயிற்சிக் காலம் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும் .

பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவ மாணவிகள் வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் அரக்கோணம் எஸ் . ஆர் . கேட் அருகில் அமைந்துள்ள நகராட்சி ஆரம்ப பள்ளியிலும் விண்ணப்பம் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது . போட்டித் தேர்வுக்கு தயார் செய்யும் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது .

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு . சி . அ . ராமன்,இ . ஆ . ப . அவர்கள் தெரிவித்துள்ளார் .

9/5/17

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்-9 .

9/5/17
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.